புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 296 | 01-05-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 01 | Issue: 296 | 01-05-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## தமிழகத்துக்கு 2.5 டிஎம்சி காவிரி நீர் திறக்க வேண்டும்: கர்நாடக அரசுக்கு ஆணையம் உத்தரவு

புதுடெல்லி: மே.1–

காவிரியில் தமிழகத்துக்கு மே மாதத்தில் வழங்க வேண்டிய 2.5 டிஎம்சி நீரை திறக்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 50வது கூட்டம் அதன் தலைவர் எஸ்.கே.ஹல்தர் தலைமையில் நேற்று டெல்லியில் நடைபெற்றது. அதில் தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் நீர்வளத்துறை அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர். அப்போது கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அமைந்த 4 அணைகளின் நீர்மட்டம், நீர்வரத்து, வெளியேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் தமிழக அரசின் சார்பில், "கோடை காலம் என்பதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி மே மாதத்தில் தமிழகத்துக்கு கர்நாடகா 2.5 டிஎம்சி நீரை திறந்து விட வேண்டும். அந்த நீரை பிலிகுண்டுலு சோதனை நிலையத்தில் மே மாத இறுதிக்குள் கர்நாடக அரசு உறுதிப்படுத்த வேண்டும்" என வலியுறுத்தினார்.

இதை ஏற்றுகொண்ட ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தர், "தமிழகத்துக்கு 2.5 டிஎம்சி காவிரி நீரை கர்நாடகா திறந்து விட வேண்டும்" என உத்தரவிட்டார்.

## புதுச்சேரியில் எந்த கட்சிக்கும் தனி மெஜாரிட்டி இல்லை: கருத்துக்கணிப்பு முடிவால் ரங்கசாமி கலக்கம்

புதுச்சேரி: மே.1–

புதுச்சேரியில் எந்த கட்சிக்கும் தனி மெஜாரிட்டி இல்லை என்ற பெரும்பாலான கருத்துக் கணிப்புகளின் முடிவால் முதல்வர் ரங்கசாமி கலக்கத்தில் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. புதுச்சேரியில் சட்டப்பேரவை பொதுத்தேர்தல் ஏப்.9ம்தேதி நடைபெற்றது. இதில் இதுவரை இல்லாத வகையில் 91.23 சதவீத வாக்குகள் பதிவாகி புதிய சாதனை படைத்தது. வாக்கு எண்ணிக்கை வருகிற 4ம்தேதி நடைபெற உள்ளது. புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் தேஜ அணியில் என்ஆர் காங்கிரஸ், பாஜக, அதிமுக, லஜக கட்சிகளும், இந்தியா கூட்டணியில் திமுக, காங்கிரஸ், விசிக இணைந்து போட்டியிட்டன. இதுதவிர தவெக தனி அணியாகவும், நாதக தனித்தும் போட்டியிட்டன. இருப்பினும் பிரதான 2 கூட்டணிகள் இடையே 2 முனை போட்டியே புதுச்சேரியில் நிலவின. 5 மாநில தேர்தல் முடிவடைந்த நிலையில், நேற்று மாலை தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகள் வெளியாகின. இந்தியபொருளாதாரம்

இதில் புதுச்சேரி மாநிலத்தில் தேஜ அணிக்கு 34 முதல் 36 சதவீத வாக்குகள் கிடைக்கும் எனவும், இந்தியா கூட்டணிக்கு 30 முதல் 32 சதவீத வாக்குகள் கிடைக்கும் எனவும் தனியார் நிறுவனங்கள் நடத்திய கருத்துக் கணிப்பு முடிவில் தெரியவந்துள்ளது. அதேபோல் தேஜ அணி ஆட்சியமைக்க வாய்ப்புள்ளதாக கருத்துக் கணிப்பு முடிவில் தெரிவித்துள்ள நிலையில் என்ஆர் காங்கிரசுக்கு 10 முதல் 12 இடங்களும், பாஜகவுக்கு 5 முதல் 6 இடங்களும், லஜகவுக்கு 1 முதல் 2, அதிமுகவுக்கு 1 இடமும் கிடைக்கும் என குறிப்பிட்டுள்ளது. அதேபோல் திமுக 6 முதல் 8 இடங்களையும், காங்கிரஸ் 1 முதல் 3 இடங்களையும் கைப்பற்ற வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும் தவெக அணிக்கு 1, சுயேச்சைகள் 1 முதல் 2 இடங்களில் வெல்ல வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளன. இதே முடிவுகளைதான் பெரும்பாலான கருத்துக் கணிப்புகளும் வெளியிட்டுள்ள நிலையில் என்ஆர் காங்கிரஸ் வட்டாரங்கள் அதிர்ச்சியில் உள்ளன.

ஏற்கனவே கடந்த 2021 தேர்தலில் 10 இடங்களில் வெற்றிபெற்ற என்ஆர் காங்கிரஸ் ஆட்சியமைக்க பாஜக சுயேச்சைகளை இழுத்து கடும் நெருக்கடி கொடுத்தது. திட்டங்களை நிறைவேற்றுவதில் முட்டுக்கட்டை போட்டது. தற்போதைய தேர்தல் கருத்துக் கணிப்பில் எந்தவொரு கட்சிக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் முதல்வர் ரங்கசாமி கலக்கத்தில் உள்ளாராம். காரணம், புதுச்சேரி தேர்தல் பிரசாரத்துக்கு வந்த பிரதமர் மோடியும், அமித்ஷாவும் தேஜ கூட்டணியே ஆட்சியமைக்கும் என தெரிவித்தனர். ஆனால் தங்களது அணி வெற்றிபெற்றால் ரங்கசாமிதான் முதல்வர் என தெரிவிக்கவில்லை.

இதனால் இந்த முறையும் பாஜ தயவால் காலம் ஓட்ட வேண்டி இருக்குமோ என்று தட்டாஞ்சாவடி, மங்கலம் என 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள முதல்வர் ரங்கசாமி கலக்கத்தில் இருக்கிறாராம். புதுச்சேரிக்கு சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்ற 1964 முதல் தற்போது வரையிலும் கட்சித் தாவல், ஆட்சி கவிழ்ப்பு மற்றும் அவசரநிலை பிரகடனம் போன்ற காரணங்களால் இதுவரை 7 முறை குடியரசு தலைவர் ஆட்சி அமலாகி உள்ளது. குறிப்பாக சுயேச்சை, கூட்டணி கட்சிகளின் அந்தர் பல்டியால் தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை ஏற்கனவே 2, 3 முறை புதுச்சேரி சந்தித்த வரலாறும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சாத்தான்குளம் வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் ஜூன் 1க்குள் மேல்முறையீடு செய்யலாம்: ஐகோர்ட்

மதுரை: மே.1–

சாத்தான்குளம் ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020ல் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த போது சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர்.

இது தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்து அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், மேலும், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமை காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது.

இந்த வழக்கை மதுரை மாவட்ட நீதிமன்றம் விசாரித்து ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்தது. தூக்குதண்டனையை உறுதிப்படுத்தக்கோரி தமிழக அரசு மற்றும் சிபிஐ தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உட்பட 9 பேரும் சிறையில் இருந்தபடி காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் ஆஜராகினர். அப்போது நீதிபதிகள், 9 பேரிடமும் வழக்கறிஞர்கள் நியமனம் செய்துள்ளீர்களா? எனக் கேட்டார். அதற்கு, அடுத்த விசாரணைக்குள் வழக்கறிஞர் நியமித்துவிடுவோம் என பதிலளித்தனர்.

இதையடுத்து சிபிஐ மேல்முறையீடு மனுவின் நகலை குற்றவாளிகளுக்கு வழங்க பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். முதல் குற்றவாளியான ஸ்ரீதர், மேல்முறையீட்டு மனுவை தயார் செய்ய 15 நாள் விடுப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்தார். அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மேல்முறையீடு மனு தயாரிக்க சிறைத்துறை போதிய வசதிகளை செய்து தரும்.

சிறையில் அனைத்து வசதிகளும் உள்ளது. எனவே விடுமுறை தேவையில்லை என்றனர்.

தொடர்ந்து நீதிபதிகள், இந்த வழக்கு தமிழகம் முழுவதும் உற்றுநோக்கப்படும் வழக்காகும். எனவே, ஜூன் 1க்குள் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்யுங்கள். ஜூன் 4 முதல் தினமும் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். விசாரணை ஜூன் 4க்கு ஒத்திவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# வாக்கு எண்ணிக்கை கண்காணிப்பு பணி; 234 தொகுதிகளுக்கும் வெளிமாநில ஐஏஎஸ் அதிகாரிகள்: தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை

சென்னை: மே.1–

வாக்கு எண்ணிக்கை கண்காணிப்பு பணிக்காக 234 தொகுதிகளுக்கும் வெளிமாநில ஐஏஎஸ் அதிகாரிகளை நியமித்து தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழக சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியை அமைதியாகவும் வெளிப்படையாகவும் நடத்த தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு ஏற்கனவே எந்த சிக்கலும் இல்லாமல் நிறைவடைந்த நிலையில், மே 4ம் தேதி நடைபெற உள்ள வாக்கு எண்ணிக்கையை அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கி வருகின்றனர். வாக்குப்பதிவு முடிந்ததும், 75,000க்கும் மேற்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக சீல் வைக்கப்பட்டு, 62 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் மத்திய பாதுகாப்பு படையினர் மற்றும் மாநில போலீசார் இணைந்து 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர். வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகள் முழுமையாக மூடப்பட்டு, வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் சிசிடிவி மூலம் கண்காணிக்க வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி காலை 8 மணிக்கு தபால் வாக்குகளுடன் தொடங்கும். அதன் பின்னர் மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும். முதல் சுற்று முடிவுகள் காலை 9 மணிக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பணிக்காக தமிழகம் முழுவதும் சுமார் ஒரு லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முன்கூட்டியே சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையங்களிலும் தேவையான மேஜைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், சிசிடிவி கண்காணிப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் தயார் நிலையில் உள்ளன. மேலும், பெரிய தொகுதிகளில் கூடுதல் மேஜைகள் அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த முறையில், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு தொகுதிக்கும் வெளிமாநிலத்தை சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரிகள் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 234 அதிகாரிகள், தங்களுக்கான தொகுதிகளில் மே 2ம் தேதிக்குள் சென்று பணியில் பொறுப்பேற்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையின் ஒவ்வொரு கட்ட முடிவுகளும் இந்த பார்வையாளர்களின் ஒப்புதலுடன் மட்டுமே அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். அதேபோல், எந்தவித அவசர நிலை ஏற்பட்டாலும், அந்தந்த பார்வையாளர்கள் வழிகாட்டுதல் வழங்குவார்கள். இறுதி முடிவுகளும் அவர்களின் கையொப்பத்திற்குப் பிறகே வெளியிடப்படும். அதன் ஒரு பகுதியாக சென்னையில் உள்ள 16 தொகுதிகளுக்கான பணியாளர்களுக்கும் தனிப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தபால் வாக்குகள் மற்றும் இயந்திர வாக்குகளை சரியாக எண்ணும் முறைகள், வாக்கு எண்ணும் போது பராமரிக்கப்படும் படிவங்களான 18, 20, 21இ மற்றும் 21 சி, படிவம் 22 உள்ளிட்ட 15 படிவங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை நாள் எந்த சிக்கலும் இல்லாமல் நடைபெறுவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தேர்தல் ஆணையம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# "தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக திமுக என்றென்றும் திகழ்ந்திடும்": முதல்வர் ஸ்டாலின்



சென்னை: மே.1–

"உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும்," என்ற உறுதியை அளிக்கிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் செய்து வந்திருக்கிறோம்.

'பெரியாரையும், அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்' என்று சொன்னவர் கருணாநிதி. அவர் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம் காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களைப் பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக e-Scooter வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கைவிலங்குகளைத் தவிர எதுவுமில்லை" என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்ஸுக்கு சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் –செயலாலும்– வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருப்பத்தூர் தொகுதியில் 6 கிராமங்களில் மறு வாக்குப் பதிவு கோரிய வழக்கு தள்ளுபடி

புதுக்கோட்டை: மே.1–

சிவகங்கை திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் மீண்டும் வாக்குப்பதிவு நடத்த கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆர்.பால குறிச்சி, ஆர்.சீகம்பட்டி, ரெகுநாதபட்டி, வைரன்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட ஆறு கிராமங்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியுடன் சேர்க்கப் பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி நடத்த தேர்தலில், இந்த கிராம மக்கள் யாரும் வாக்களிக்கவில்லை. இதனால், இந்த கிராமங்களில் மறு வாக்குப் பதிவு நடத்தக் கோரி, பாலகுறிச்சியை சேர்ந்த பாஜக பிரமுகர் லட்சுமணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், திருப்பத்தூர் தொகுதியில் தங்கள் கிராமத்தை சேர்த்துள்ளதால், நிர்வாக உதவிகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஆறு கிராமங்களை புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் சேர்க்க கோரி, பல ஆண்டுகளாக மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் 6 கிராமங்களைச் சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பதால், இந்த ஆறு கிராமங்களுக்கும் மீண்டும் புதிதாக வாக்குப் பதிவு நடத்த வேண்டும் என மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, தேர்தலின் போது இந்த ஆறு கிராம மக்களை வாக்களிக்க விடாமல் யாரும் தடுக்கவில்லை. தேர்தல் முடிந்த பிறகு எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும் என கேள்வி எழுப்பி, இந்த வழக்கு செல்லதக்கதல்ல எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். திருப்பத்தூர் தொகுதியில் அமைச்சர் பெரிய கருப்பன் திமுக சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடதக்கது.

# திருக்கோவிலூரில் தமிழ் கவிஞர் நாள் விழா நடைபெற்றது.



திருக்கோவிலூர் மே 1

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் தமிழ்க் கவிஞர் நாள் விழா நடைபெற்றது.

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் தேதியன்று தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது.

அதன்படி, தமிழ்க் கவிஞர் நாளான புதன்கிழமை (ஏப்.29) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கபிலர் நினைவுத்தூணுக்கு மாலை அணிவித்து மலர் தூவும் நிகழ்வும், சிறப்புக் கருத்தரங்கமும் திருக்கோவிலூரில் நடைபெற்றது.

விழாவுக்கு கள்ளக்குறிச்சி ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை வகித்து, சங்ககாலப் புலவர் கபிலர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் தே.முருகன், நகராட்சிப் பொறியாளர் ஜெயப்பிரகாஷ், மணலூர்பேட்டை தமிழ்ச் சங்கத் தலைவர் தா.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருக்கோவிலூர் நகர்மன்றத் தலைவர் டி.என்.முருகன் தமிழறிஞர்களுக்கு நூல்களைப் பரிசாக வழங்கினார்.

கபிலனுக்கோர் கவிமாலை என்ற தலைப்பில் கோவல் தமிழ்ச்சங்கத் தலைவர் சிங்கார உதியன், கபிலரின் கவிநயம் என்ற தலைப்பில் புலவர் ரெ.ஜெயராமன், கபிலரும் பாவேந்தரும் என்ற தலைப்பில் புலவர் கா.பி.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கல்வியாளர் தேவ. ஆசைத்தம்பி, தமிழ்ச் சங்கப் புரவலர் கு.கல்யாணகுமார், வானவில் கல்வி அறக்கட்டளைத் தலைவர் வே.ஜெயக்குமார், கவிஞர்கள் கவிநிலவன், கிஷோர், கம்பன் கழகத் தலைவர் கலைச்சித்தன், செயலர் வைத்திமுருகன், முதுகலைத் தமிழாசிரியர்கள் கயல்விழி, சூர்யகலா, நளினி, தேவா, தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பா.கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்வைத் தமிழ் வளர்ச்சித் துறை உதவியாளர் சி.தமிழ்ச்செல்வி ஒருங்கிணைத்தார். நிகழ்வில் தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் இரா. அருட்செல்வி, கோவல் தமிழ்ச் சங்கத்தின் செயலர் மு.அன்பழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற்றதையடுத்து கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் ஆகியோர் உள்ளனர்.

# பாண்டியன் குலம் புனித லூர்து அன்னை ஆலய பத்தாம் ஆண்டு திருவிழா



செஞ்சி மே 01

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா சம்பந்த ஊராட்சி பாண்டியன் குளம் கிராமத்தில் புனித லூர்து அன்னை ஆலய பத்தாம் ஆண்டு திருவிழா வெகுவிமர்சையாக நடைபெற்றது

நிகழ்ச்சியில் 24/ 04 / 2026 அன்று திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது , இதில் திருப்பலியும் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது.

தொடர்ந்து 27/04 / 2026 திங்கட்கிழமையன்று மாணவர்கள் மற்றும் பொது மக்களின் நடனம் மற்றும் சிலம்பம் கும்மி பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து 28/04/ 2026 அன்று செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6 மணி முதல் திருப்பலி அணிலாடி பங்குத்தந்தை பெர்க்மான்ஸ் மற்றும் பேராசிரியர் அலெக்ஸ் தலைமையில் நடைபெற்றது.

முன்பாக கம்மந்தூர் ஊராட்சி மன்ற தலைவர் காமாட்சி சத்தியமூர்த்தி தலைமையில் புனித லூர்து அன்னை ஆலயத்திற்கு மேயாதாளம் சீர்வரிசை எடுத்து வந்து லூர்து அன்னைக்கு மாலை அணிவித்து லூர்து அன்னையை தரிசனம் செய்தனர். தொடர்ந்து இரவு 8:30 மணிக்கு தேர் பவனி துவங்கியது . வான வேடிக்கையுடன் நடைபெற்ற தேர்பவனியை ஊராட்சி மன்ற தலைவர் காமாட்சி சத்தியமூர்த்தி சமூகத் தலைவர் பவுல்தாஸ் பங்குத்தந்தை பெர்க்மான்ஸ் பீட்டர் பேராசிரியர் அலெக்ஸ் ஊர் பொதுமக்கள் தேர் பவனியை இழுத்து தொடங்கி வைத்தனர் . தேர் பவனியானது தெருக்களில் வளம் வந்து லூர்து அன்னை பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் அருகே தேர்தல் நாளில் நடந்த சம்பவத்தை வைத்து இரு பிரிவினரிடையே மோதலை தூண்டும் முன்னாள் ஊராட்சித் தலைவர் உள்ளிட்ட 2 பேர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி மாவட்ட எஸ்.பியிடம் புகார்



திருவள்ளூர் மே 01 :

திருவள்ளூர் அருகே கைவண்டூர் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த மனுவில் தெரிவித்திருப்பதாவது. கைவண்டூர் ஊராட்சிக்கு உள்பட்ட குப்பம்மாள் சத்திரம் பகுதியைச் சேர்ந்த சுரேஷின் வீட்டின் அருகே கடந்த 23 ஆம் தேதி சட்டப்பேரவை தேர்தலின் போது பாண்டூர் கிராமத்தை சேர்ந்த சபரீசன், சூர்யா உள்ளிட்ட தனது நண்பர்களுடன் மது அருந்தியதோடு வீடருகே சிறுநீர் கழித்ததாகக் கூறப்படுகிறது. இதை அந்த வீட்டின் உரிமையாளர் சுரேஷின் மனைவி தட்டி கேட்டாராம்.

இதனால் இருதரப்புக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து கைவண்டூர் முன்னாள் ஊராட்சி தலைவர் சவுக்கார்பாண்டி பொதுமக்கள் சிலருடன் சேர்ந்து இருதரப்பினரையும் சமரசம் செய்து அனுப்பி வைத்துள்ளனர். அதைத்தொடர்ந்து சபரீசன், ஆட்டோ ஓட்டுநர் நாகராஜ் என்பவரை அடியாள்களை வைத்து கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் ஆட்டோ ஓட்டுநர் நாகராஜ் கைவண்டூர் பகுதியைச் சேர்ந்த 20}க்கும் மேற்பட்ட ஊர் பெரியவர்களை அழைத்துக் கொண்டு பாண்டூரைச் சேர்ந்த சபரீசனிடம் சென்று விசாரித்துள்ளனர்.

அப்போது அங்கு இருதரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த சபரீசன் வீட்டில் இருந்த பட்டா கத்தியை எடுத்து வந்து சுழற்றி அச்சுறுத்தியும், கற்களால் வீசி தாக்கியுள்ளார். இதையடுத்து கைவண்டூர் முன்னாள் ஊராட்சி தலைவர் சவுக்கார்பாண்டி இரு தரப்பினரையும் சமரசம் செய்து அனுப்பி உள்ளார்.

இப்பிரச்னை சுமூகமான நிலையில், தற்போது இரு கிராமத்தினருக்கும் இடையே சமூக பிரச்னையை ஏற்படுத்தும் விதமாக பாண்டூர் பகுதியை சேர்ந்த முன்னாள் அதிமுகவைச் சேர்ந்த ஊராட்சி தலைவர் மோகன் மற்றும் ரவி ஆகியோர் இதனை அரசியல் உள்நோக்கத்துடன் தூண்டி விடுகின்றனர். எனவே மோதல் ஏற்படும் விதமாக சபரீசனை வேண்டுமென்றே திருவள்ளூர் கிராமிய காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுக்கச் செய்து முன்னாள் ஊராட்சி தலைவர் சவுக்கார்பாண்டி மற்றும் ஆட்டோ ஓட்டுநர் நாகராஜ் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் உரிய விசாரணை மேற்கொண்டு இரு கிராமங்களுக்கு சமூக பிரச்னையை ஏற்படுத்தும் விதமாக செயல்படும் மேற்குறிப்பிட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை வலியுறுத்தி கைவண்டூர் கிராமத்தைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட அனைத்து சமூக மக்களும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த மனுவில் அளித்துள்ளனர்.

# உழைப்பின் பெருமையை

## உலகுக்கு உணர்த்திய மே தின வாழ்த்துக்கள்

### கட்சியின்தலைவர் பேராசிரிர் மு.ஹி.ஜவாஹிருல்லா வெளியிடும் மே தின வாழ்த்து செய்தி

உழைக்கும் கரங்களின் ஒற்றுமையை உணர்த்தி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்திய நாள் தொழிலா ளர் தினமாகிய மே தினத் திருநாள். தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த மே தின நல்வாழ்த்துகளை உள்ளன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



எல்லாச் சூழலிலும் வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணி சேர்ந்து வாழும் பன்மைத்துவ சமூக அமைப்பு கொண்ட இந்தியாவை மதத்தால், சாதியால் பிளவுபடுத்தும் மதவெறி பாசிச சக்திகள் ஒன்றியத்தில் அதிகாரத் தில் இருந்து உழைக்கும் மக்களுக் குப் பாதிப்பை உண்டாக்கி வருகின்றன. வேலை உத்தரவாதம், ஊதிய உயர்வு, வைப்பு நிதி உள்ளிட்ட தொழிலாளர் பாதுகாப்பு திட்டங்கள் யாவும் ஒன்றிய பா.ஜ.க. அரசால் சீர்குலைக்கப் பட்டு வருகிறது உழைக்கும் தொழிலாளியின் வியர்வை உலரும் முன் அவருக்கான கூலியை வழங்கி விடுங்கள் என்பது நபிகளாரின் பொன்மொழி. உலகத் தொழிலாளர்கள் அனைவருக்குமான உரிமைகள் பாதுகாக்கப் பட வேண்டும்.

உழைப்பாளர் தினத்தில் நாட்டை முன்னேற்றப் பாதையில் தோள்கொடுத்துத் தூக்கி நிறுத்துகின்ற உழைப்பாளர்கள் அனைவருக்கும் மே தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிகதிர் எக்ஸ்பிரஸ் காலை நாளிதழ் சார்பில் உழைக்கும் தோழர்களுக்கு இனிய மேதினம் (உழைப்பாளர் தினம் நல்வாழ்த்துக்கள் ) தெரிவித்துக் கொள்கின்றோம்

# 3வது பிரசவத்துக்கு 12 வாரங்கள் விடுப்பு வழங்கும் அரசாணை உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிரானது: ஐகோர்ட்

சென்னை: மே.1–

மூன்றாவது பிரசவத்துக்கும் ஓராண்டு விடுப்பு வழங்க வேண்டுமென்றும், 12 வாரங்கள் மட்டும் விடுப்பு வழங்கும் அரசாணை உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரானது என்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் பணியாற்றும் சாய்நிஷா என்பவர் தனது 3வது பிரசவத்துக்காக 2026 பிப்ரவரி முதல் 2027 பிப்ரவரி வரை மகப்பேறு விடுப்பு வழங்கக்கோரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

ஆனால் அதை ஏற்க மறுத்த மாவட்ட முதன்மை நீதிபதி, 3வது பிரசவத்துக்கு 12 வாரங்கள் மட்டுமே விடுப்பு வழங்க முடியும் என்ற அரசாணைப்படி ஏப்ரல் மாதத்துக்குள் பணியில் சேரும்படி சாய் நிஷாவுக்கு உத்தரவிட்டார்.

வலியும், வேதனையும் இதை எதிர்த்து சாய் நிஷா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு, 3வது பிரசவமும் முதல் இரு பிரசவங்களைப் போல வலியும், வேதனையும் அடங்கியதுதான்.

இதைக் கருத்தில் கொண்டே உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அரசு பெண் ஊழியர்களின் மூன்றாவது குழந்தைக்கும் ஓராண்டு காலம் மகப்பேறு விடுப்பு வழங்க உத்தரவிட்டுள்ளது.

எனவே மனுதாரருக்கு ஓராண்டு காலத்துக்கு மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் என விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதிக்கு உத்தரவிட்டுள்ளனர்.

3வது பிரசவத்துக்கு 12 வாரங்களுக்கு மட்டும் விடுப்பு வழங்க வேண்டுமென்ற அரசாணை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரானது. அரசின் இந்த அரசாணை நீதித்துறையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் உத்தரவிட்டுள்ளனர்.

# வாக்கு எண்ணும் மையத்துக்குள் செல்ல QR Code அடையாள அட்டை அவசியம்:

## தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல்

சென்னை: மே.1–

வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு ஙிஸிசிஷீபீமீ மற்றும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அவசியம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்கு எண்ணிக்கை முகவர்கள் 3 அடுக்கு சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்படுவார்கள். முதல் 2 இடங்களில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை சரிபார்க்கப்படும். 3வது இடத்தில் க்யூ ஆர் கோடு ஸ்கேனிங் மூலம் அடையாள அட்டை சரி பார்க்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# கள்ளக்குறிச்சி : டன் கணக்கில் தேங்கி கிடக்கும் மருத்துவ கழிவுகள் தீ வைத்து எரிக்காமல் அகற்ற கோரிக்கை.



கள்ளக்குறிச்சி மே 1

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் டன் கணக்கில் தேங்கி கிடக்கும் மருத்துவ கழிவுகளை தீ வைத்து எரிக்காமல் அகற்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனையானது நகர பகுதியில் அமைந்துள்ள கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனைக்கு கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம், கல்வராயன்மலை மற்றும் கடலூர் மாவட்டம் சிறுபாக்கம், அடரி, வேப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து கர்ப்பிணி தாய்மார்கள் பிரசவத்திற்கு தினந்தோறும் வருகின்றனர்.

தமிழகத்திலேயே கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தான் அதிகபடியான கர்ப்பிணி தாய்மார்களுக்கு அறுவை சிகிச்சை இல்லாமல் சுக பிரசவம் பார்க்கப்படுகிறது. இதனால் வெளிமாவட்டத்தில் உள்ள கர்ப்பிணி தாய்மார்கள் கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு வருகை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் பிரசவத்திற்கு பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை கழிவுகள், ஊசி, மருத்துவ கழிவுகள், பேண்டேஜி, கைஉறை கிளவுஸ், மருத்துவ ஊழியர்கள் மற்றும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருகின்ற நோயாளிகள் கொண்டு வரப்படுகின்ற பிளாஸ்டிக் பொருட்கள், மருத்துவமனையில் பணியாற்றும் தூய்மை பணியாளர்கள் தினந்தோறும் சேகரிக்கின்ற மருத்துவ கழிவுகள் வெளியேற்றாமல் மருத்துவமனை வளாகத்தில் பயன்படுத்தி வந்த பிணவறை பகுதியில் தேக்கிவைக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. மேலும் மருத்துவ கழிவுகளை நாள் கணக்கில் தேக்கிவைத்து இரவு நேரங்களில் அங்கு பணியாற்றும் தூய்மை பணியாளர்களை கொண்டு தீ வைத்து எரிக்கப்படுகிறது. இதனால் அந்த மருத்துவமனை வளாகத்தில் சிகிச்சை பெறும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு நோய் பரவும் அபாயம் இருந்து வருகிறது.

மேலும் மருத்துவமனை வளாகத்தில் தேக்கிவைத்து எரிக்கப்படுகின்ற மருத்துவ கழிவுகளால் மருத்துவமனை பின்புற பகுதியில் வசிக்கின்ற குழந்தைகள் மற்றும் வயதானவர்களுக்கு மூச்சு திணறல் ஏற்படுகிறது. மேலும் பல்வேறு நோய் தொற்று பரவும் அபாயநிலை இருந்து வருகிறது.

எனவே மகப்பேறு மருத்துவமனையில் அன்றாடம் பயன்படுத்தப்படுகின்ற அறுவை சிகிச்சை மருத்துவ கழிவுகளை தினந்தோறும் சேகரித்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மருத்துவமனை வளாகத்தில் மலைபோல் குவித்து டன் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மருத்துவ கழிவுகளை எரிக்கப்படாமல் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் நலன் கருதி முழுமையாக வெளியேற்ற மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மற்றும் மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் பவானி ஆகியோர் உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.




விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 026 நடைபெற்றதையொட்டி வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடக்கூடிய நுண்பார்வைாளர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

# சாத்தனூர் அணை தண்ணீரை பகிர்ந்து வழங்கக்கோரி விவசாயிகள் போராட்டம்.



சங்கராபுரம் மே 1

சாத்தனூர் அணையில்இருந்துபாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரை அனைத்து ஏரிகளுக்கும் பகிர்ந்து வழங்க வலியுறுத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டத்துக்குள்பட்ட செல்லக்காகுப்பம், விரியூர், கிடகுடையாம்பட்டு, திம்மநந்தல், குளத்தூர் உள்ளிட்ட பல கிராமங்களின் குளங்களுக்கு சாத்தனூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் தண்ணீர் வாய்க்கால் மூலம் வழங்கப்பட்டு வருவது வழக்கம். இந்த நீரால் ஏரி, குளம், கிணறுகள் நிரம்பி விவசாயத்துக்கு தேவையான பாசன வசதி கிடைத்து வந்தது.

தற்போது அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், அது முறையாக கால்வாய்கள் வழியாக விநியோகம் செய்யப்படாமல் இருப்பதாகவும், இதனால் கடைமடைப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை எற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் பல ஏரிகள், குளங்கள் நிரம்பாமல் வட நிலையில் உள்ளன. இதன் விளைவாக சுமார் 5,000 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பாதிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

எனவே, பொதுப் பணித்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு அணையில் இருந்து வரும் நீரை அனைத்து ஏரிகளுக்கும் சமமாக பகிர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் செவ்வாய்க் கிழமை வாய்க்காலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தஞ்சையில் துணிச்சலுடன் செயல்பட்ட எஸ்.எஸ். ஐக்கு., போலீஸ் சூப்பிரண்டு பாராட்டு..!!



தஞ்சாவூரில்: மே.1–

கடந்த 26.04.2026 தேதியிட்டான்று தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மெட்ரோ பஜார் அருகில், கையில் வாளுடன் ஒருவரை தாக்க முயன்ற குற்றவாளியை, தனது பணி ஓய்வு நேரத்திலும் கூட மிகுந்த தைரியம் மற்றும் விழிப்புணர்வுடன் துரிதமாக செயல்பட்டு தடுத்து நிறுத்திய தஞ்சாவூர் மேற்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சம்மந்தம் அவர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

அவரது கடமைப் பற்று, தன்னலமற்ற சேவை மனப்பான்மை மற்றும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் உறுதியான செயல்பாடு மூலம் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

இந்த சிறப்பான பணியை பாராட்டும் விதமாக, தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம் இ. கா. ப., அவர்கள், சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பந்தம் அவர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரில் வரவழைத்து பாராட்டுகளை தெரிவித்ததுடன்.. சான்றிதழ் வழங்கி கௌரவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக வாக்கு எண்ணிக்கையை பார்வையிட மே 2ல் தேர்தல் பார்வையாளர்கள் வருகை




சென்னை: மே.1–

தமிழகம் முழுவதும் 62 மையங்களில் மே 4ம் தேதி நடைபெறும் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட தேர்தல் பார்வையாளர்கள் மே 2ம் தேதி தமிழகம் வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் கடந்த ஏப்.23ம் தேதி தேர்தல் நடைபெற்றது. எவ்வித அசம்பாவிதம், மறு வாக்குப்பதிவும் இன்றி நடைபெற்று முடிந்த இந்த தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவு 85.10 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் இருந்து பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள், விவிபாட் மற்றும் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், அந்தந்த தொகுதிகள் அடங்கிய வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள 'ஸ்டிராங்' அறைகளில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன.

இந்த ஸ்டிராங் அறைகளுக்கு 4 அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், சிசிடிவி கேமரா மூலமும் கண்காணிக்கப்படுகிறது. தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு வந்த துணை ராணுவப் படையினரில் ஒரு பிரிவினர் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர வாக்கு எண்ணிக்கை பாதுகாப்புக்காக 18 ஆயிரம் போலீஸார் பணிய மர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் வரும் மே 4ம் தேதி 62 மையங்களிலும் காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

முதலில் தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும். அதன்பின் மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு தொடர்பாக, நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் எஸ்.சாய்குமார் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது.

இதில் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக், ஆவடி காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்கா, தாம்பரம் காவல் ஆணையர் சஞ்சய்குமார் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில், வாக்கு எண்ணிக்கை முடியும் வரை தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, வாக்கு எண்ணிக்கை நாளில் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

சட்டப்பேரவைத் தேர்தலின்போது, ஏற்கெனவே சிறப்பு தேர்தல் பார்வையாளர் மற்றும் தொகுதிக்கு ஒரு தேர்தல் பார்வையாளர், காவல் துறை பார்வையாளர் மற்றும் செலவினப் பார்வையாளர்கள் என வெளி மாநில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் தேர்தல் பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட வரும் மே 2ம் தேதி தமிழகம் வருகின்றனர். 62 மையங்களிலும் பணியாற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கான தேர்வு அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் ஏற்கெனவே நடைபெற்று முடிந்துள்ளது.

இந்நிலையில், நேற்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில், சென்னையில் 234 தொகுதிகளுக்குமான வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நடைபெற்ற இதில், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் உட்பட 3 பேர் என 234 தொகுதிகளுக்கும் சேர்த்து ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

புதுச்சேரி தேர்தல் அலுவலர் ஞானவேல் அனைவருக்கும் பயிற்சி அளித்தார். இதில் வாக்கு எண்ணிக்கை நடத்துவது, சுற்றுவாரியாக முடிவுகளை வெளியிடுவது, ஆவணங்களை பாதுகாப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கும் வாக்கு எண்ணிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினார். இதில், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சிவஞானம், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி வே.ஸ்ரீதர், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி ஆர்.மேனுவல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை அருகே விவசாய நிலத்திலிருந்து பழங்காலத்து சிலைகள் கண்டெடுப்பு

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மானம்பாடியில் உள்ள வயலில் இருந்து பழங்காலத்து சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

மானம்பாடி, பிரதான சாலையைச் சேர்ந்தவர்



ஜோசப் மகன் அலக்ஸான்டர் (36). இவர், தனக்கு சொந்தமான வயலில் உள்ள வரப்பை வெட்டும்போது, அங்கு பழங்காலத்து சிலைகள் இருப்பதை கண்டறிந்தார்.

பின்னர், இது தொடர்பாக, அவர், கிராம நிர்வாக அலுவலர் லோகநாதனுக்கு தகவல் அளித்ததின் பேரில், அந்த இடத்திற்கு வந்த அவர், சுமார் ஒன்றரை அடி உயரம் கொண்ட யானை சிலை, 1, திருவாச்சி 1, சிறிய சுவாமி சிலைகள் 3, உடைந்த பானை 1 என மொத்தம் 6 எண்ணிக்கையில் உலோகத்தினாலான சிலைகளை சேகரித்தார். பின்னர், திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து வட்டாட்சியர் சாந்தமீனாவிடம், அந்த உலோகச் சிலைகளை வழங்கினார்.

இது தொடர்பாக வருவாய்த் துறையினர் கூறியது: கண்டெடுக்கப்பட்ட சிலைகள் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள், இங்கு வந்து சிலைகளை சேகரித்துக் கொள்வார்கள். பின்னர், தொல்லியியல் துறையினர், சிலைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டபின், இந்த சிலைகள் குறித்து தெரிய வரும் எனத் தெரிவித்தனர்.

# ஓசூரில் பழைய பொருள்கள் சேமிப்பு குடோனில் திடீர் தீ விபத்து : நீண்ட நேரம் போராடி தீயை அணைத்த தீயணைப்புத்துறையினர்



ஓசூர் ராம்நகரில் திறந்த வெளி பகுதியில் நான்கு இடத்தில் பழைய பொருட்கள் சேமிப்பு குடோன்கள் உள்ளது இதில் உசேன் (30) என்பவருக்கு சொந்தமான பழைய பொருட்கள் சேமிப்பு குடோனில் இன்று மதியம் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது இந்த தீ விபத்தால் அந்த பகுதி முழுவதும் புகை சூழ்ந்து வான் உயரத்திற்கு புகை சென்றது பற்றி எரிந்த தீயால் அப்பகுதி முழுவதும் கடுமையான வெப்பம் காணப்பட்டது

தகவல் அறிந்து சென்ற ஓசூர் தீயணைப்புத்துறையினர் நீண்ட நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர் இரண்டு தீயணைப்புத்துறை வீரர்கள் சம்பவ இடத்தில் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டனர் தீ விபத்தில் குடோனில் சேமித்து வைத்திருந்த ஆயிரக்கணக்கான மதிப்புள்ள பழைய பொருள்கள் எரிந்து சேதமானது தீ விபத்தை பார்ப்பதற்காக சாலையில் சென்ற பொது மக்களும் அங்கு குவிந்ததால் அப்பகுதியில் பரபரப்பு.

# ஜூன் 15ம் தேதிக்குள் துருவ நட்சத்திரம் படத்தை வெளியிட ஐகோர்ட் அனுமதி

சென்னை: மே.1–

விக்ரம் நடித்த துருவ நட்சத்திரம் படத்தை ஜூன் 15ம் தேதிக்குள் வெளியிட அனுமதி அளித்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. படத்தை வெளியிட 'கொண்டாடுவோம் என்டர்டெயின்மெண்ட்' நிறுவனத்திற்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. ஜூன் 15ம் தேதிக்குள் படத்தை வெளியிட இயலவில்லை என்றால் கால நீட்டிப்புக் கோரி நீதிமன்றத்தை நாடவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் புண்ணியமூர்த்தி, பிரேம்குமார் தொடர்ந்த வழக்கை ஜூன் 23ம் தேதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

# பூண்டி உள்ளிட்ட ஏரிகளில் போதுமான நீர் ஆதாரம் இருப்பு உள்ளதால், கோடையில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாது : நீர்வளத்துறை அதிகாரிகள் தகவல் :



திருவள்ளூர் மே 01 :

திருவள்ளூர் அருகே உள்ள பூண்டி ஏரி சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரி 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டது. இங்கு ஆந்திரா தமிழகம் ஒப்பந்தப்படி பெறப்படும் கிருஷ்ணா நீரானது பூண்டி ஏரியில் சேமிக்கப்பட்டு, செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கும் இணைப்புக் கால்வாய் வழியாக அனுப்பப்பட்டு, அங்கிருந்து சென்னை மாநகராட்சி பகுதிக்கு குடிநீருக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் கடும் கோடை வெயில் சுட்டெரித்து வருவதாலும், நீர்வரத்துக் கால்வாய் அமைந்துள்ள பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இந்த நிலையில் பூண்டி ஏரியானது 35 அடியம், 3231 மில்லியன் கன அடி நீர் சேமித்து வைக்க முடியும். தற்போதைய நிலையில் கோடைக்காலம் என்பதால் வெயில் அதிகமாக இருப்பதால் நீர் ஆவியாகும் நிலையில் 31 அடியும், 1987 மில்லியன் கன அடியும் இருப்புள்ளது. இணைப்பு கால்வாயில் 250 கன அடியும், பேபி கால்வாயில் 17 கன அடியும் நீர் திறந்துவிடப் பட்டுள்ளது.

அதேபோல், சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளான புழல் ஏரியில் 1997 மில்லியன் கன அடியும், சோழவரம் 0.489 மில்லியன் கன அடியும், செம்பரம்பாக்கம் 2952 மில்லியன் கன அடியும், கண்ணன் தேர்வாய் கண்டிகை 0.404 மில்லியன் கன அடியும் நீர் இருப்பு உள்ளது. மேலும், திருவள்ளூர் ஊத்துக்கோட்டை சாலையில் பூண்டி ஏரி கரையோரம், நீர் வரத்துக் கால்வாய் பகுதிகள், திருவள்ளூர் தாமரைப்பாக்கம் சாலையில் கொசஸ்தலை ஆற்று பகுதிகள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நீர் எடுத்து அதை சுத்திகரிப்பு தொட்டிகளில் சுத்தம் செய்து சென்னை குடிநீருக்கு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இது போன்ற காரணங்களால் ஏரிகளில் 3 மாதங்களுக்கு மேல் போதுமான நீர் ஆதாரம் உள்ளதால் கோடைக்காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்பே கிடையாது என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் அவர்கள் வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுக்கான கண்காணிப்பு அறை ஆய்வு செய்தார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெ.தங்கதுரை மற்றும் பல அதிகாரிகள் உடனிருந்து பார்வையிட்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டம் அறந்தங்கி அருகே ,ஆலங்குடி கிராமத்தில் காளியம்மன், கருப்பர், நூதன ஆலய அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.





அறந்தாங்கி மே1

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தாலுகா, ஆலங்குடி கிராமத்தில் ,காளியம்மன், கருப்பர்,நூதன ஆலய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர்,

இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென கோயில் நிர்வாகிகளால் முடிவு செய்யப்பட்டு அதற்கான புணரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தது. இந்நிலையில் சிறப்பான யாகசாலை அமைக்கப்பட்டு முதற்கால யாகபூஜை புதன்கிழமை கணபதி ஹோமத்துடன் தொடங்கியது.

விழாவின் முக்கிய நாளான இன்று மூன்றாம் கால யாகபூஜை நிறைவுற்று கடம் புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.

கடம் புறப்பாடானது கோவிலை சுற்றி வலம்வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது, பின்னர் கருட பகவான் கோவிலை வட்டமிட சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கும்பத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நூற்றுக்கனக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர் அனைவருக்கும் அன்ன தானம் வழங்கப்பட்டது .

கோவில் கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை ஆலங்குடி கிராமத்தினர் செய்திருந்தனர். அறந்தாங்கி காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்றிய அரசு மருத்துவர்கள்



சென்னை: மே.1–

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தையை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் காப்பாற்றினர்.

இதுதொடர்பாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவக் கண்காணிப்பாளர் பாஸ்கர், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மதிவாணன் ஆகியோர் கூறியதாவது: சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனையில் கடந்த மாதம் தனலட்சுமி என்ற பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

மருத்துவமனையில் இருந்த ஒரு உபகரணத்தில் மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால், குழந்தையின் உடலில் 23 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டது.

இதையடுத்து, குழந்தை மேல்சிகிச்சைக்காக சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.

அப்போது, குழந்தையின் உடலில் சூடு குறைந்து போயிருந்தது. நாடி மெலிதாக துடித்துக் கொண்டிருந்தது.

துரிதமாக செயல்பட்ட மருத்துவக் குழுவினர், உடனே குழந்தையின் உடலில் ஏற்பட்டிருந்த காயத்தை சுத்தப்படுத்தி, திசு சிகிச்சையும் மேற்கொண்டனர்.

இதன்பிறகு, 4 நாட்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசத்தில் குழந்தை வைக்கப்பட்டது. தீக்காயத்தில் கிருமித் தொற்று இருந்ததால் ஆன்டிபயாடிக் மருந்துகள் தொடர்ந்து 14 நாட்கள் செலுத்தப்பட்டன.

இதற்கிடையே, 3ம் நாளில் குழாய் மூலம் குழந்தைக்கு தாய்ப்பாலும் கொடுக்கப்பட்டது. பின்னர், படிப்படியாக பாலாடை வழியாகவும், நேரடியாகவும் தாய்ப்பால் கொடுக்கப்பட்டது. தினமும் காயத்தை சுத்தப்படுத்தி தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

24 நாட்களில் குழந்தை முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளது. குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மணப்பாறை புறவழி சாலை திட்டத்தை தொடங்கி விரைந்து முடித்து வீணாகப் போகும் காவிரி குடிநீர் தடுக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசுக்கு கோரிக்கை



மணப்பாறை மே.1

மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி புறநகர் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் மணப்பாறை புறவழி சாலை திட்டத்தை தொடங்கி விரைந்து முடித்து வீணாகப் போகும் காவிரி குடிநீர் தடுக்கவும் ஆண்டு நான்கு அல்லது ஐந்து முறை காவேரி குடிநீர் பைப் உடைந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வீண் விரைய செலவை தடுக்க

தமிழக அரசுக்கு கோரிக்கை மனுவை அனுப்பியுள்ளார்

அம் மனுவில் மேலும் மணப்பாறை நகரை ஒட்டி புறசாலை அமைக்க 2016 ஆண்டு அதிமுக ஆட்சியில் அறிவிக்க பட்டு இத்திட்ட பணி கூறித்து ஆய்வு செய்ய 40 லட்சம் நிதி ஒதுக்கி சட்ட மன்றத்தில் அறிவிப்பு செய்தனர் 2021திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின் 2022 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நெடுஞ்சாலை துறை மாணிய கோரிக்கையில் மணப்பாறை சட்ட மன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர் மணப்பாறை பகுதியில் புறவழி சாலை கூறித்து வீனா தொடுத்த போது துறையின் அமைச்சர் மணப்பாறையில் அரை வட்ட புறவழி சாலை அமைக்கும் பணியில் ஆய்வுகள் நடந்து வருகிறது என்றார்

மணப்பாறை சூற்றி அரைவட்ட புறவழி சாலை அமைக்கும் பணியின் ஆய்வில் குளித்தாலை சாலை பகுதியில் தொடங்கி திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை வரை ஒரு ஒப்பந்த நிறுவனமும் புதுக்கோட்டை சாலை தொடங்கி துவரங்குறிச்சி சாலை வழியாக திண்டுக்கல்திருச்சி தேசிய நெடுஞ்சாலை வரை மற்றொரு ஒப்பந்த புள்ளியும் பெறபட்டு சுமர் பதினைந்து கிலோமீட்டர் தொலைவு அரைவட்ட. சாலை அமைக்கும் பணிக்கு ஆய்வு தொடங்கி ஜி.பி.எஸ் அமைத்து முடித்தனர்

மணப்பாறை நகரத்திற்குள் தினசரி பொதுமக்கள் பயணிக்கும் போருந்துகள் ஐம்பதுக்கும் மேற்பட்ட வழித்தடத்திலும் தொலைதூர பயண போருந்துகள் இருபது வழித்தடதில் இருந்து இயங்கும் பேருந்துகள் நகரின் மையபகுதியில் இருக்கும் பேருந்து நிலையத்திற்கு நூற்றுக்கும் மேற்பட்ட முறை வந்து செல்கின்றன

ஊள்ளுரில் உள்ள மற்ற வாகனங்களுடன் தூத்துக்குடி மதுரை சேலம் சென்னை பெருநகரங்களில் இருந்து வரும் கனரக வாகனங்கள் திருச்சி சாலை மேம்பாலத்தில் கீழ் இரங்கும் இடத்தின் அருகில் உள்ள மாரியம்மன் கோவில் அருகில் பிரியும் பேருந்து நிலையத்திற்கும் கோவில்பட்டி சாலை வழியக செல்ல வேட்டிய இவ் இடத்தில் பதிக்கபட்டு உள்ள காவேரி குடி நீர் பைப்புகள் ஆண்டுக்கு நான்கு அல்லது ஐந்து முறை பாழுது ஏற்படுவது பல லட்சம் லிட்டர் குடிநீர் வீணாகப் போவதும் குடிநீர் வடிகால் வாரியம் உடைந்த பைப்புகளின் மாற்றி புதிய வைப்புகள் போடுவதும் தொடர்கதையாக இருந்து வருகிறது நகராட்சி நிர்வாகத்தில் உள்ள தாலுகா அலுவலக எதிர்புரம் இருக்கும் சாலை மாரியம்மன் கோவில் ராஜவிதி சாலை என்பதால் சிமிண்ட் சாலையாக அமைக்க பட்டு இருந்தது இவ் வழியகதான் தூத்துக்குடி துறை முகத்தில் இருந்து வரும் சென்னை மைசூருக்கு கனரக வாகனங்கள் செல்ல வேண்டும் என்பதால் இச் சாலை குண்டும் குழியுமாகவும் சிமிண்ட் சாலை . கம்பிகள் வெளியே தெரிய வகனத்தின் டையரை குத்தி விபத்துக்கள் ஏற்படும் நிலையை தடுக்க சிமிண்ட் சாலை தார்சாலையாக அமைக்கபட்டு சரி செய்தும் நகராட்சி நிர்வாகத்திற்கும் வீன் நிதி நெருக்கடி ஏற்படுகிறது அதேபோல் நெடுஞ்சாலை துறைக்கு வீண் நிதிநிலை நெருக்கடி ஏற்படுகிற நிலையில் நகராட்சி நிர்வாகத்திற் காவேரி குடிநீரை மக்களுக்கு வினியேகம் சரிவர செய்ய முடியத நிலை அவலம் ஏற்படுகிறது கனரக வகனங்களாள் நகர் பகுதி மிகவும் போக்குவரத்து நெருக்கடிக்கு உள்ளாகி உரிய நேரத்தில் கல்வி கற்க செல்லும் மாணவர்கள், தொழிலளிகள், அரசு ஊழியர்கள்,விபத்தல் மற்றும் நோய்வாய்ப்படவர்கள் மணப்பாறையில் இயக்கும் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு ஆம்புலன்சில் வரும்போதும் சிறம்ம பட்டு பயணிக்க வேண்டிய அவளத்தை போக்க தொலை நோக்குடன் தொடங்க பட்ட அரை வட்ட சாலை அமைபப்பு திட்டத்தை உடன் தொடங்கி விரைந்து முடிக்க வேண்டுகிறோம் என்று மனுவை மனுப்பி வைத்து உள்ளார்

# புதுச்சேரி சிறுமி கொலை வழக்கு: கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பு; மே 5ல் தண்டனை விவரம் அறிவிப்பு



புதுச்சேரி: மே.1–

புதுச்சேரியை உலுக்கிய சிறுமி கொலை வழக்கில் கருணாஸ் குற்றவாளி என போக்சோ நீதிமன்றம் நேற்று அறிவித்தது. வரும் மே 5ம் தேதி தண்டனை அறிவிக்கப்படுகிறது.

முத்தியால்பேட்டை சோலை நகரைச் சேர்ந்த 5ம் வகுப்பு படித்த 9 வயது சிறுமி கடந்த 2024 மார்ச் 2ம் தேதி வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த போது திடீரென மாயமானார். 2 நாட்களுக்குப்பின் அருகே உள்ள வாய்க்காலில் கை, கால்கள் கட்டப்பட்டு போர்வையால் சுற்றப்பட்ட நிலையில், பிணமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் புதுச்சேரியை உலுக்கியது. முத்தியால்பேட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்து, அதே பகுதியைச் சேர்ந்த கருணாஸ் (19), விவேகானந்தன் (59) ஆகியோரை போக்சோ வழக்கில் கைது செய்தனர். இவ் வழக்கு தொடர்பாக 540 பக்க குற்றப்பத்திரிகையை போலீஸார் தாக்கல் செய்தனர்.

இதில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விவேகானந்தன் கடந்த 2024 செப்டம்பரில் கழிவறையில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். தொடர்ந்து வழக்கு போக்சோ விரைவு நீதி மன்றத்தில் நீதிபதி சுமதி முன்பாக நடந்தது. விசாரணை முடிந்த நிலையில் இன்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிபதி சுமதி, குற்றம் சாட்டப்பட்ட கருணாஸை குற்றவாளி என அறிவித்தார். வரும் மே 5ம் தேதி இரு தரப்பு வாதத்துக்கு பிறகு தண்டனை விவரத்தை அறிவிப்பதாக தெரிவித்தார்.

இவ் வழக்கு தொடர்பாக அரசு தரப்பு வழக்கறிஞர் பச்சையப்பன் கூறியதாவது: பாலியல் நோக்கில் குழந்தை கடத்தல், குழந்தையை அடைத்து வைத்தல், கொலை செய்தல் ஆகிய பிரிவுகளிலும் தடயம் ஆதாரம் மறைத்து வைத்தல் மற்றும் போக்சோ சட்டம் 6ன் கீழ் கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ் வழக்கில் மரணத்தண்டனைக்கான குற்றங்களுக்கான பிரிவுகள் இருக்கிறது. அரிதினும் அரிதான வழக்கு என உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் படி அரசு தரப்பு, எதிர்தரப்பு விவாதங்களுக்கு பிறகு தண்டனை விவரம் தெரிவிப்பார்கள்.

அரசு தரப்பில் குற்றவாளிக்கு மரணதண்டனைதான் தீர்வு என வாதங்கள் வைத்துள்ளோம். வாதங்கள் கடந்த 15 முதல் 17 வரை நடந்தது. எழுத்துப்பூர்வ வாதங்களையும் எடுத்து வைத்துள்ளோம்.

இவ்வழக்கில் புதுச்சேரி வழக்கறிஞர்கள் எதிர்தரப்புக்கு ஆஜராகவில்லை. இலவச சட்ட உதவி மையம் மூலம் விழுப்புரம் வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டோர் தரப்புக்காக நீதிமன்றம் நியமித்தது. அரசு தரப்பு சாட்சியங்கள் 54 பேரை விசாரித்தோம். 80 ஆவணங்கள், பாதிக்கப்பட்ட சிறுமி செருப்பு, ஆடை, முடி, கைப்பற்றப்பட்ட உயிரி மாதிரிங்கள் சான்று பொருட்களாக சமர்பித்தோம்.

கடந்த 2024 நவம்பரில் சாட்சி விசாரணை தொடங்கியது. இவ்வழக்கில் 54 சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டன.குற்றம் சாட்டப்பட்ட விவேகானந்தன் தற்கொலை செய்ததால் அவர் மீது இவ்வழக்கில் இருந்த எஸ்சிஎஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் குற்றம் சாட்டப்பட்டோர் செல்போனில் ஆபாச வீடியோக்கள், உயிர் மாதிரிகள் கிடைத்தன.

முக்கிய வழக்குகளில் பாலியல் குற்றங்கள் மற்றும் போக்சோ வழக்குகளில் கூட்டு பாலியல் வன்கொடுமை, குழந்தை இறப்பு , குழந்தை 12 வயதுக்கு கீழ் இருப்பது ஆகிய மூன்று குற்றங்கள் அடிப்படையில் இவ் வழக்கு இருக்கிறது. அதனால் தண்டனையை உடன் அறிவிக்க இயலாது.

வழக்குகளில் குற்றவாளி தீர்ப்பு வந்த பிறகு என வந்த பிறகு தண்டனை குறைக்க குற்றவாளி தரப்பும், அதிகபட்ச தண்டனை தர அரசு தரப்பும் வாதம் செய்யவுள்ளனர். அதன்பிறகுதான் தண்டனை விவரம் அறிவிக்கப்படும்“ என்றார். இவ்வழக்கு விசாரணை பார்ப்பதற்காக சிறுமி பெற்றோர், உறவினர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி 106– கோபிசெட்டிப்பாளையம் மற்றும் 107– பவானிசாகர் (தனி) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமான கோபிசெட்டிப்பாளையத்தில் உள்ள கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ல் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல்இடப்பட்டு, மூன்றடுக்கு பாதுகாப்பு வசதியுடன் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் எல்இடி தொலைக்காட்சிகளில் கண்காணிக்கப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421